# அறநெறிக்காலப் பண்பாட்டசைவியக்கத்தில் பொதுமகளிர்

**திருமதி. செல்வ அம்பிகை நந்தகுமரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
selvampikai@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்ச்சமூகத்தில் பரத்தமை பற்றிய கருத்துகளை இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. சங்க அக இலக்கியங்களில் பரத்தை என்னும் பெண் பாத்திரம் முதன்மை பெறுவதோடு சமூகத்தில் பரத்தமையும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டது. அறநெறிக் காலத்தைப் பொறுத்தவரை பரத்தமை கடிந்துரைக்கப்பட்ட தன்மையை அற இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. அறநெறிக் காலத்தில் தோன்றிய இரட்டைக்காப்பியங்கள் பரத்தையரைக் கணிகையர் எனப் பெயர் சுட்டியதோடு ஒரு சமுதாய நிறுவனமாகச் செயற்பட்ட பாங்கினையும் கணிகையர் குலமரபின் மாற்றத்திற்கான புதிய முயற்சிகளையும் எடுத்துக்காட்டியுள்ளன. அறநெறிக்காலச் சமூகக் கட்டுமானத்தில் பொதுமகளிர்க்கு எவ்வாறான இடம் வழங்கப்பட்டுள்ளது? அந்த இடத்தை அற இலக்கியங்கள் உரியவகையில் புலப்படுத்தி நிற்கின்றனவா? என்பது ஆய்வின் பிரச்சினையாகக் கொள்ளப்பட்டு "அறநெறிக்காலப் பண்பாட்டசைவியக்கத்தில் பொதுமகளிர்" என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் பரத்தமை ஓர் ஒழுக்கமாகப் பயிலப்பட்ட நிலையில் அறநெறிக்காலச் சமூகத்தில் அவ் எண்ணக்கருவின் பயில்வு எவ்வாறிருந்தது என்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். பரத்தமை குறித்த எண்ணக்கருவின் பயில்வினை அறிவதற்கு அறநெறிக்கால இலக்கியங்கள் எல்லைப்படுத்தப்படுகின்றன. அறநெறிக் காலத்தில் பரத்தமை சமூக நிறுவனமாகச் செயற்பட்டதோடு தளர்ச்சி நிலையும் கண்டது என்ற கருதுகோளின் அடிப்படையில் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. அற இலக்கியங்களும் இரட்டைக் காப்பியங்களும் முதன்மை ஆதாரங்களாகவும் பரத்தமை தொடர்பாக எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் துணை ஆதாரங்களாகவும் ஆய்வில் கொள்ளப்படுகின்றன. அற இலக்கியங்களில் பரத்தமை பற்றிய பயில்வினை அறிவதற்கு விவரண ஆய்வு முறையியலும் பரத்தமை தொடர்பான கருத்து மாற்றங்களை அறிவதற்கு ஒப்பீட்டு ஆய்வு முறையியலும் பின்பற்றப்படுகின்றது. அறநெறிக் காலப் பண்பாட்டு அசைவியக்கத்தில் பரத்தமை ஏற்படுத்திய தாக்கத்தை அதன் பயில்வு நிலையை இந்த ஆய்வின் மூலம் கண்டுகொள்ளமுடியும்.

திறவுச் சொற்கள் - அறநெறிக்காலம், அற இலக்கியங்கள், பண்பாடு இரட்டைக்காப்பியங்கள், கணிகையர்.

## அறிமுகம்

தமிழ்ச்சமூகத்தில் பரத்தையர் குறித்த கருத்துகள் வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு சூழலில் இடம்பெற்றிருந்த நிலை குறித்து இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் பெண்மாந்தர்களுள் குறிப்பிடும்படியான இடத்தைப் பெறுபவள் பரத்தையாவாள். ஏனெனில் சங்க அக இலக்கியங்களில் இடம்பெறும் தலைவன், தலைவி மற்றும் தோழி என்னும் பாத்திரங்கள் முதன்மை பெறுவதற்குப் "பரத்தை" என்னும் எதிர்மறையான பெண்பாத்திரப்படைப்பு முக்கியமானதாகும். உயர்

குடிமாந்தர்களை இலக்கியங்களில் பதிவுசெய்யும் வழக்கம் இருந்த சூழலில் விளிம்பு நிலை மாந்தராக அறியப்பட்ட பரத்தையர் பற்றிய பதிவுகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பரத்தையர்கள் சமூகத்தில் அங்கீகரிக்கப் பட்டவர்களாகவே விளங்கினர். சங்க காலச் சமூகச்சூழலில் பரத்தமையின் சமூக ஏற்புடைமையைச் சங்க அகப்பாடல்கள் விவரிக்கின்றன.

சங்ககாலத்தை அடுத்து வந்த அறநெறிக்காலம் அறவொழுக்கங்களுக்கு முதன்மை அளித்தமையால் இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களும் அறத்தைப் பாடு பொருளாகக் கொண்டுள்ளன. அறநெறிக்காலத்தில் வணிகவர்க்கத்தின் எழுச்சியினால் பரத்தமை ஒரு சமுதாய நிறுவனமாகச் செயற்பட்டதை இலக்கியங்களின் வழி அறிய முடிகின்றது. பரத்தமையின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் அறநெறிக்கால இலக்கி யங்கள் சித்திரிக்கின்றன. அறநெறிக்கால இலக்கியங்களில் பரத்தமை குறித்த பயில்வு களையும் பண்பாட்டில் அது ஏற்படுத்திய தாக்கத்தையும் இந்த ஆய்வின் மூலம் கண்டு கொள்ளலாம்.

## சங்க இலக்கியங்களில் பரத்தமை பற்றிய பதிவுகள்

தொல்காப்பியம், சங்க காலத்தில் களவொழுக்கம் ஒழுகாமலும் மணம் செய்து கொள்ளாமலும் காமத்திற்காக ஆண்களுடன் கூடிவாழும் பெண்கள் சிலர் இருந்துள்ளனர் என்பதைப் பதிவு செய்துள்ளது. மேலும் பரத்தையிற் பிரிவைப் பதிவுசெய்யும் போதும் மூன்று வகையான பரத்தையர் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய பெண்களைத் தொல்காப்பியம், காமக்கிழத்தியர், காதற்பரத்தையர், சேகரிப்பரத்தையர் என மூன்று பிரிவினராகக் குறிப்பிடுகின்றது. (தொல்காப் பியம், பொருள். நூற்பா.59) நிலவுடைமைச் சமுதாயம் தோற்றம் கொண்ட காலத்திய சமூக நடப்பியல் நிகழ்வுகளைப் பதிவுசெய்ய முற்பட்டதைத் தொல்காப்பிய நூற்பாக்கள் தெளிவு படுத்துகின்றன.

மனித வாழ்வியலிலே காலங்காலமாகப் பரத்தமை காணப்படுகின்றது. பழந்தமிழர் வாழ் வியலிலே பரத்தமை பற்றிய செய்திகளைத் தொகுத்து நோக்கும்போது சங்கப் புலவர்களின் நோக்கும் வெளிப்படுகின்றது. சங்ககாலத்தில் பரத்தமை ஒழுக்கம் கடியப்படாமல் சமூக மரபாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததை இலக்கியச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. அக மாந்தர்களின் அகவுணர்வுகளைக் கூறுகின்ற அகப்பாடல் களில், பெண்களின் மனவுணர்ச்சிகள் எவ்வாறு அக்காலச் சமூக நிலைமையை விளக்குகின்றது என்பதை உணரமுடிகின்றது.

சங்க காலத்தில் பரத்தமை ஒழுக்கம் கடிந்துரைக்கப்பட்டுள்ளது. பரத்தையர் பற்றிய சங்கப்பாடல்களின் பதிவுகள் சமூக நிலையிலே பரத்தமை ஏற்படுத்திய சிக்கல் களை விரிவாக விளக்கியுள்ளன. தலைவன், தலைவி, பரத்தை எனத் தனிப்பட்டோரின் வாழ்வியலில் மட்டுமன்றி சமூக நிலையிலும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. அகப் பாடல்களில் காணப்படும் பரத்தமை பற்றிய பாடல்களில் பெரும்பான்மையானவை மருத நிலத்திற்குரியனவாகும். தொல்காப்பியரும் மருத நிலத்திற்குரிய ஒழுக்கமாக ஊடலைக் குறிப்பிடுகின்றார். சங்கப் பாடல்களில் பரத்தமை பற்றிய பாடல்கள் குறிப்பிடுகின்ற கருப்பொருள் விளக்கங்கள், மருத நிலத்திற்குரியன. மருத நிலக்கருப் பொருள்கள், கூற்றுநிலையாக அகவுணர்வை வெளிப்படுத்தி நின்றன. பரத்தமை பற்றிய செய்திகள் புலவர்களின் நேரடி விளக்க நிலையாகவும் உவமை, உள்ளுறை, இறைச்சிப் பொருள் எனப் பல்வேறு எடுத்துரைப்பு உத்திகளைக் கையாண்டும் பாடல்களிலே பதிவுசெய்யப்பட்டுள்ளன.

"கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே"(குறுந்தொகை:8)

இப்பாடலில் மருத நிலத்திற்குரிய கருப்பொருள்கள் இடம்பெற்றுள்ளன. பாடலின் மாம்பழம் தலைவனாகவும் வாளைமீன் பரத்தையாகவும் உள்ளுறை உவமையாக்கப் பட்டுள்ளது. பரத்தையிற் கூற்றான இப்பாடலில் பரத்தையின் உணர்வைப் புலப்படுத்தும் கருப்பொருள்களைப் புலவர் இயற்கையின் பொருத்தப்பாட்டுடன் பாடல்களில் இணைத்துள்ளார்.

சங்க காலச் சமூகத்தில் பெண்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை அறிவதற் கும் பரத்தமை பற்றிய பாடல்கள் சான்றாக உள்ளன. அகவுணர்வுகளைக் கூறுகின்ற அகப் பாடல்களில் பெண்களின் மனவுணர்வுகள் எவ்வாறு அக்காலச் சமூக நிலையைப் புலப் படுத்துகின்றன என்பதையும் அறியமுடிகின்றது. அகப்பாடல்களைப் பாடிய புலவர்களில் பலர் பரத்தமையின் சமூக ஏற்புடைமை எவ்வாறு இருந்தது என்பதை வெளிப்படுத்திக் காட்டியிருந்தனர்.

## சங்கமருவியகால அறநூல்களில் பரத்தமை பற்றிய பதிவுகள்

சங்கமருவிய கால அறநூல்கள் எனப்படுபவை திருக்குறள், நாலடியார் முதலான பதினொரு நூல்களாகும். இத்தகைய இலக்கியங்கள் அனைத்தும் சமண சமயக் கருத்து களை வலியுறுத்தும் நோக்கில் படைக்கப்பெற்றதாகும். இவை தவிர சிலப்பதிகாரமும், மணிமேகலையும் முறையே சமண, பௌத்த சமயக் கருத்துகளைப் பேசுகின்ற காவியங்களாக அமைகின்றன. இவை யாவும் தமிழரின் வாழ்வியல் கருத்துகளுக்கு எதிரானவையாகவும் கருதப்படுகின்றன. அறநெறிக் காலச் சமூகத்தில் "பரத்தமை" பற்றிய எண்ணக்கருவின் பயில்வு, எவ்வாறிருந்தது என்பதை அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களூடாக வகைப்படுத்தி நோக்கலாம். திருக்குறளைத் தனித்தும் ஏனைய அறநூல்களை ஒருமித்தும் வகைப்படுத்துவதன் மூலம் பரத்தமை பற்றிய எண்ணக்கரு, அதில் ஏற்பட்ட மாறுதல்கள் தொடர்பான தெளிவினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

### நாலடியார் முதலான அறநூல்களில் பரத்தமை

நாலடியார் முதலான அறநூல்களில் பரத்தமை உறவு வன்மையாகக் கண்டிக் கப்பட்டுள்ளது. பரத்தையருக்கு வழங்கப்பட்டுள்ள அடைமொழிகள் அவர்களின் புறத் தோற்றத்தையும் அகப்பண்பையும் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இப்பெண்களுடைய இயல்புகளைப் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளன.

| | |
|---|---|
| "வேசையர் நட்பும்" | (நாலடி.371) |
| "ஆணமில் நெஞ்சத்து அணி நீலக் கண்ணார்க்கு" | (நாலடி.374) |
| "மலங்கு அன்ன செய் மகளிர்" | (நாலடி.375) |
| "ஒண்ணுதலார் தேறமொழிந்த மொழி" | (நாலடி.379) |
| "உள்ளம் ஒருவன் உழையதா வொண்ணுதலார்" | (நாலடி.380) |
| "விழைவு இல்லாப் பெண்டிர்" | (திரி.05) |
| "காண்தகு மென் தோள் கணிகை வாய் இன்சொல்" | (திரி.24) |
| "அல்குல் விலை பகரும் ஆய் தொடியும்" | (திரி.25) |

| | |
|---|---|
| "புலமையக்கம் வேண்டிப் பொருட்பெண்டிர் தோய்தல்" | (திரி.23) |
| "பரந்து ஒழுகும் பெண்பாலை" | (திரி.73) |
| "மனம் பிறிதாகக் காரியத்தில் குன்றாக் கணிகையும்" | (திரி.76) |
| "தோள் வழங்கி வாழும் துறைபோல் கணிகையும்" | (திரி.81) |
| "வேசையர்கள் கோலமும்" | (ஆசாரம்.51) |
| "நிறுத்த மனம் இல்லார் சேரியகத்தும்" | (ஆசாரம்.55) |
| "வண்ண மகளிர் இடத்தொடு" | (ஆசாரம்.82) |
| "ஒருபொழுதும் காவாதாள்" | (சிறுபஞ்சம்.40) |
| "வரைவு இல்லாப் பெண்வையார்" | (சிறுபஞ்சம்.78) |
| "பொருந்திய பூண்முலையார்" | (சிறுபஞ்சம்.93) |

நாலடியார் முதலான அறநூல்களில் பரத்தையர்கள் ஓர் இழிவான நிலையில் பதிவு செய்யப் பட்டுள்ளனர் என்பதை மேற்காட்டிய பாடல் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. புறத்தோற்றத்தில் அழகும் அலங்காரப் புனைவுமாக விளங்கும் பரத்தையர், பொருளுக் காக எதையும் செய்வார்கள் என்ற கருத்தையே இக்குணவியல்புகள் மூலம் விளக்கி யுள்ளனர். அக்காலத்தில் பரத்தமை சமூகத்தில் அங்கீகாரம் பெற்றிருப்பதையும் இப்பதிவுகள் உண்டாக்குகின்றன.

## பரத்தமை பற்றிய வள்ளுவரின் நோக்குநிலை

பொருட்பாலில் "வரைவின் மகளிர்" என்ற அதிகாரத்தில் பொதுமகளிர் பற்றிய நோக்கு நிலையை வள்ளுவர் வெளிப்படுத்தியுள்ளார். இந்த அதிகாரம் பொதுமகளிரைக் கடிந்துரைப்பதோடு ஆண்களின் ஒழுக்கத்தை வலியுறுத்துவதற்காகவும் அமைக்கப்பட்ட தொன்றாகும். வரைவு என்ற சொல் ஒருவனுக்கு ஒருத்தி என்று வரையறை செய்து கொள்ளும் திருமணத்தைக் குறிக்கின்றது. வரைவின் மகளிர் என்பது திருமணமாகாத பெண்ணொருத்தி திருமணம் என்னும் வரையறையைக் கடந்து பல ஆண்களோடு உறவுகொள்ளும் பெண்ணைக் குறிக்கின்றது.

வள்ளுவர் வரைவின் மகளிர் என்னும் அதிகாரத்தில் இப்பெண்களுடைய குணவியல்புகளைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

| | |
|---|---|
| பொருள் விழையும் ஆய்தொடியார் | (குறள்.911) |
| பண்பில் மகளிர் | (குறள்.912) |
| பொருட் பெண்டிர் | (குறள்.913) |
| பொருட் பொருளாளர் | (குறள்.914) |
| தகை செருக்கிப் புன்னலம் பாரிப்பார் | (குறள்.916) |
| பிற நெஞ்சிற் பேணிப் புணர்பவர் | (குறள்.917) |
| மாய மகளிர் | (குறள்.918) |
| வரைவிலா மாணிழையார் | (குறள்.919) |
| இருமனப் பெண்டிர் | (குறள்.920) |

வரைவின் மகளிரின் பொதுவான இயல்புகளை இப்பெயர்களினூடாக வள்ளுவர் வெளிப்படுத்தி யுள்ளார்.

நாலடியார் காமத்துப்பாலில் "பொதுமகளிர்" என்ற அதிகாரத்தினூடாகப் பரத்தமையைச் சாடுகின்றார். ஆனால் வள்ளுவரோ பரத்தையருக்கே இடமளிக்காத காமத்துப்பாலை அமைத்துள்ளார். தலைவன் தலைவியின் மனமொத்த காதல் வாழ்வில் பரத்தையருக்கு வள்ளுவர் இடமளிக்கவில்லை. தொல்காப்பியம் கூறிய பரத்தையிற் பிரிவு வள்ளுவர்வகுத்த கற்பியலில் இல்லை. "பரத்தையரை ஒதுக்கி ஊடல் அதிகாரங்களை

நுணுக்கமாக யாத்த புதுப்பெருமை உடையவர் வள்ளுவர்" (மாணிக்கம், வ,சுப., 1962.ப.128) தலைவன் பிழையேதும் செய்யாதவிடத்தும் பிழையுள்ளது போன்று தலைவி வருவிக்குமிடத்தும் தலைவன் முன்செய்த தவறுகளை நினைக்குமிடத்தும் ஊடல்வரும் என வள்ளுவர் காட்டுகின்றார். வள்ளுவர் ஊடல் என்பது காதல் வாழ்க்கை சிறப்பதற்கும் கூடல் இன்பம் மிகுவிப்பதற்கும் அவசியமானது என்கிறார். சங்க அகப் பாடல்களில் மருதநில உரிப்பொருளாகப் பாடப்பட்ட ஊடலை அற இலக்கியம் என்னும் எல்லைக்குள் நின்று வள்ளுவர் பாடியுள்ளார்.

பரத்தமை உறவால் குடும்பத்திலும் சமூகத்திலும் நாட்டிலும் ஏற்படக்கூடிய சிக்கல்களை உணர்ந்துள்ளார். குடும்பம், சமூகம், நாடு என்ற மூன்று நிலைகளிலும் பண்பாட்டுச் செம்மையை வள்ளுவர் பேண விரும்பியுள்ளார். இதனாலேயே சீர்கேட்டினையும் சிக்கல்களையும் தரும் வரைவின் மகளிர் உறவை வன்மையாகக் கண்டித்துள்ளார். வள்ளுவரின் சமயப்பின்னணியும் சமூகப் பின்னணியும் இதற்குக் காரண மாக இருந்திருக்கலாம். தான் வாழ்ந்த காலத்துச் சமூகத்தில் காணப்பட்ட வரைவின் மகளிரையும் பெண்மையின் வகைகளில் ஒன்றாக வகுத்து நோக்கிய வள்ளுவர், ஒழுக்க நெறி பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் அவசியமானது என்பதை வரைவின் மகளிர் என்னும் அதிகாரத்தினூடாக முன்வைத்துள்ளார்.

## இரட்டைக் காப்பியங்களில் கணிகையர்

இலக்கியங்களில் பரத்தையர் என்று கூறுபவர்களை இரட்டைக் காப்பியங்களான சிலம்பும் மணிமேகலையும் "கணிகையர்" என்று அழைக்கின்றது. இரட்டைக் காப்பியங்கள் கணிகையர் குறித்து ஒரு வரைவுச் சித்திரத்தை வழங்குவதுடன், அவர்களின் வெவ்வேறு பிரிவுகள் அவர்களின் திறன்கள், அவர்களுக்கிருந்த சமூக மதிப்பு ஆகியவை பற்றித் தெரிவிக்கின்றன.

"கணிகை" என்ற சொல் வடமொழிச் சொல்லின் தமிழ்த் திரிபாகும். இக்கணிகை யர் உயர்குடியினரைப் போன்ற செல்வ வளமும் கலைவளமும் கொண்டவர்கள். இவர்கள் அரசகுமாரர்கள், வணிகர்கள் போன்ற செல்வவளம் மிக்க உயர்குடியினரை அண்டிய வீதிகளில் குடியிருந்தனர். புகாரிலும் மதுரையிலும் கணிகையர் பலர் இருந்துள்ளமை யைச் சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறியலாம். (சிலப்பதிகாரம், அடைக்கல காதை, 38-39) கணிகையருள் பல வகையினர் இருந்துள்ளமையைச் சிலப்பதிகாரம் சுட்டியுள்ளது. நாட்டியக் கலைத்திறனைத் தம்மகத்தே கொண்டவர்கள் நாடகக் கணிகையர் எனப்பட்டனர். நாடகக் கணிகையர் குலப்பெண்கள் ஐந்து முதல் ஏழாண்டுகளாக ஆடல், பாடல் கலைகளை ஆசானிடம் முறையாகக் கற்றுத்தேர்ந்து பன்னிரண்டாவது வயதில் அரசன் முன்னிலையில் அரங்கேற்றம் செய்தனர். அரசன் அவர்களது கலைத்திறனைப் பாராட்டி ஆயிரத்தெட்டுப் பொற்கழஞ்சு மதிப்புள்ள "தலைக்கோல்" பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தான்.

கணிகையர்கள், பரத்தையர்கள் வகையினின்றும் வேறுபட்டவர்கள் என்பதை இரட்டைக்காப்பியங்கள் வரையறை செய்து காட்டியுள்ளன. குறிப்பாகச் சிலப்பதிகாரம் கணிகையரின் தோற்றம் பற்றிய கதையைக் கூறியுள்ளது. தேவலோகத்தில் முனிவர் ஒருவரை ஊர்வசி என்கின்ற தேவலோக நடனமாது அவமதித்ததால் அவரது சாபம் பெற்று பூமியில் கணிகையராய்ப் பிறந்தாள். அந்த ஊர்வசியின் மரபினர் கணிகையர் என்று உரிமை பூண்டனர். இவர்களது செல்வவளம் பற்றிச் சிலப்பதிகாரம் விவரித்துக் கூறியுள்ளது. அரசர், வணிகர் போன்ற உயர்குடியினருடன் உறவு கொண்டிருந்ததையும்

குறிப்பிட்டுள்ளன.

நாடகக் கணிகையர் கற்ற கலைகளைப்பற்றி மணிமேகலையில் சாத்தனார் பட்டியல் ஒன்றைத் தந்துள்ளார். இருவகைக்கூத்து முறை, இசைநுட்பம், பாடற்பயிற்சி, கருவி வாசிப்பு, பந்தாடல், சமையல், சுண்ணம் இடித்தல், நீராடல், கல்விமுறை, சமயத்துக் கேற்றபடி நடத்தல், பிறர்கருத்தை அறிதல், இன்சொல், தன் மனக்கருத்தைக் கரந்தொழுதல், கடிதம் எழுதுதல், மாலை மணி கோர்த்தல், ஒப்பனை, சோதிடம், கோலம் போடுதல் ஓவியம் போன்றவை ஆகும். இப்பட்டியல் மணிமேகலை நூல் எழுதப்பட்ட காலத்திலே தமிழ்நாட்டுக் கணிகையரின் கலைத்திறமையை எடுத்துக் காட்டின.

இத்தகைய கணிகையரின் இயல்பைப் பற்றி மணிமேகலையில் தெளிவாகக் கூறப்படுகின்றது. இதைக் கணிகையர் குலத்தைச் சேர்ந்த சித்திராபதி மூலமாகவே விளக்குகிறார் சாத்தனார்.

"பத்தினிப் பெண்டிர் அல்லேம் பலர்தம்
கைத்தூண் வாழ்க்கை கடலியம் அன்றே
........................
வினை ஒழி காலைத் திருவின் செல்வி
அனையேம் ஆகி ஆடவர்த் துறப்பேம்
தாபதக் கோலம் தாங்கினம் என்பது
யாவரும் நகூம் இயல்பினது அன்றே" (மணிமேகலை, காதை.18, வரி 24)

கணிகையரின் பல்வேறு சூழ்ச்சிகள் பற்றியும் மணிமேகலையில் சாத்தனார் கூறுவதும் குறிப் பிடத்தக்கதாகும். (மணிமேகலை, காதை.18, வரி 103-107)

அறநெறிக்காலச் சமூகத்தில் கணிகையர், உயர்குடியினரோடு உறவாடிச் செல்வ வளத்தில் திளைத்திருந்தாலும் இவர்களின் பண்புகளை இரட்டைக் காப்பியங்கள் கடிந் துரைத்தே பேசியுள்ளன. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், கணிகையர் மேலோர்க் கும் கற்றோர்க்கும் நோயைப் போன்றவர்கள் என்று கண்டிக்கின்றார். மணிமேகலையில் சாத்தனார், கலைகளைக் கற்று அரங்கேறிக் கலைத்திறமையால் ஆடவரைக் கவர்ந்து அவரது செல்வத்தைப் பறிப்பதே கணிகையர் வாழ்க்கை என்று நடப்பியலைச் சுட்டி யுள்ளார். இல்லற மகளிர் பொதுமகளிர் பற்றிய தெளிவான வரையறையை இரட்டைக் காப்பியங்கள் முன்வைத்துள்ளன.

## கணிகையர் வாழ்வும் துறவு நிலையும்

அறநெறிக் காலத்தில் வணிக வர்க்கத்தினரின் எழுச்சி காரணமாகச் சமுதாயத்தில் வர்க்கப் பிரிவுகள் ஏற்பட்டன. இவற்றின் பின்னணியிலே இல்வாழ்க்கைக்குப் பிறிதான தொரு கலை வாழ்க்கை என்னும் பிரிவினை ஏற்படுகின்றது. கலை வாழ்க்கையைத் தொழிலாகக் கொண்ட கணிகையர் சமூகம் உருவாகின்றது. சங்கப் பாடல்களில் காணப்படும் பரத்தையருடன் ஒப்பிடும் போது அறநெறிக் காலச் சமூகத்தில் கணிகையர், விலை மதிப்பற்ற கலைப் பொருளை பரிவர்த்தனை செய்பவராகக் காணப்படுகின்றனர். (கைலாசபதி, க, 1996, ப.118) அறநெறிக் காலத்தில் கணிகையர் ஒரு சமுதாய நிறுவனமாகத் தோன்றி நிலைத்ததன் விளைவாகக் குடும்பம், சமூகம், நாடு என்ற மூன்று நிலைகளிலும் சீர்கேட்டினை ஏற்படுத்துகின்றது.

திருக்குறள், நாலடியார் போன்ற அறநூல்களில் கணிகையரின் பண்பும் அவர் களால் ஏற்படும் சீர்குலைவும் மட்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மாறாக இரட்டைக் காப்பியங்கள் கணிகையர் பற்றிய விரிவான விவரிப்பை வழங்கியதோடு கணிகையர்

குலமரபினின்றும் விடுபடுவதற்கான மாற்று வழியையும் முன்வைத்துள்ளன. வாழ்க்கையிலே சீர்குலைவுகளும் நெருக்கீடுகளும் தோன்றும் பொழுது அவற்றிலிருந்து விடுபட சமயமொன்றைச் சார்ந்து அதன் பணிகளில் ஈடுபடுவதை பல்வேறு காலங்களில் தோன்றிய இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

காரைக்காலம்மையார், திலகவதியார் போன்றவர்கள் தம்மைச் சைவசமய வாழ்வியலோடு இணைத்துக் கொண்டமை பொருத்தமான எடுத்துக்காட்டுகளாகும்.

கோவலனின் மரணத்தின் பின்பு மாதவி பௌத்தத் துறவியாக மாறியமையைச் சிலப்பதிகாரம் சுட்டுகின்றது.

"காதலன் தன்வீவும் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறும் ஏச்சுரையும் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்துறவும் கேட்டாயோ தோழி" (சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை, வரி 4658- 4661)

மாதவி தான் சமண சமயத்தைச் சார்ந்து துறவியாகியதோடு தனது மகளாகிய மணிமேகலையையும் பௌத்தசமய நெறியில் ஈடுபடுத்தி விடுகின்றாள். முழுமையாகத் துறவுநிலை அடைவதற்கு முன்னர் மணிமேகலை, உதயகுமாரன் மேல் கொண்ட மனத்தடுமாற்றத்தையும் மறுகணமே ஏற்பட்ட மனத்திட்பத்தையும் சாத்தனார் நுட்பமாகக் காட்டியுள்ளார்.

"புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத் தியற்கை
இதுவே யாயின் கெடுகதன் திறமென" (மணிமேகலை, கதை 5, வரி 532 534)

உதயகுமாரனின் மறைவுக்குப் பிறகு மணிமேகலை உள்ளம் தவநெறியின் பாற்பட்டதைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். ஆனால் கணிகையர் குல ஒழுக்கமே நிலைபேறுடையது என்பதைக் காட்டுவது போல சித்திராபதியின் கூற்று அமைகின்றது. சித்திராபதி மட்டுமல்லாமல் சமூகமே மாதவியின் துறவைப்போலவே மணிமேகலையின் துறவையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மணிமேகலையின் துறவுநிலை கேள்வியுற்று அரசனும் நகரிலுள்ளோரும் உயர்வான மாணிக்கத்தை ஆழ்கடலில் வீழ்த்தியவரைப் போலத் துன்பமுற்றதாக இளங்கோ குறிப்பிடுகின்றார். (சிலப்பதிகாரம், வரந்தரு காதை, வரி 4795-4797). சித்திராபதி உணர்வுபூர்வமாக கணிகையர் குல மரபினின்று செயற்பட்டவள். மாதவி, மணிமேகலை ஆகியோரின் துறவுநிலை சித்திராபதிக்கு வியப்பையும் சின்னத்தையும் ஏற்படுத்தியமை ஆச்சரியப்படுவதற்கில்லை. அவளது உணர்வு கணிகையர்குல வாழ்க்கை நிலையிலிருந்து தோன்றியது. சித்திராபதியின் மகளான மாதவி கணிகையர் குல ஒழுக்கத்திற்கு மாறாக கோவலனோடு வாழ்வில் இணைந்து மணிமேகலை என்னும் மகவையும் பெற்றெடுக்கின்றாள். தனது காதலன் இறந்த செய்தியறிந்து குலத்தொழிலை விடுத்துத் துறவியானவள். அறிவின் துணை கொள்ளாமல் உணர்வு பூர்வமாகச் செயற்பட்டவள்.

"காதலனுற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா உயிரொடு நின்றே
நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்"(மணிமேகலை, காதை 02, வரி 38-41)

இக்கூற்று அவளது மனநிலையைக் காட்டுகின்றது. தனது மகளான மணிமேகலையைக் கூட கண்ணகி மகளாக "மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை" (மணிமேகலை, காதை 02, வரி, 55) என்று அறிமுகப் படுத்துகிறாள். ஆகையால் இவள் பரத்தமைத் தொழிலுக்கு உரியவள் அல்லள். அரிய தவநெறி யில் செல்லுவதற்குத் தகுதியுள்ளவள் என்று கூறினாள்.

மாதவி செய்ய முடியாததைச் செய்யும் வாய்ப்பு மணி மேகலைக்குக்

கிட்டுகின்றது. உணர்வு பூர்வமாகச் சிந்திக்காமல் அறிவின் துணைக்கொண்டு விடுதலை பெற்றவள். மந்திரங்கொடுத்த காதையிலே மணிமேகலா தெய்வத்தின் கூற்றின் மூலம் சாத்தனார் மணிமேகலையை வர்ணித்துள்ளார்.

"அறிபிறப் புற்றனை அறம்பா டறிந்தனை
பிறவற முரைப்போர் நெற்றியுங் கேட்குவை
பொதுவறி விகழ்ந்து புலமுறு மாதவன்
திருவற மெய்துதல் சித்தமென்று ..." (மணிமேகலை, காதை 10, வரி 75-85)

மணிமேகலை அறிவின் துணைக்கொண்டு துறவை மேற்கொண்ட செய்தி சாத்தனாரால் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

**நிறைவுரை**

நிறைவாக நோக்குமிடத்து அறநெறிக்காலச் சமூகக் கட்டமைப்பில் ஒழுக்க விழுமியங்களை வலியுறுத்தும் வகையில் அற இலக்கியங்களிலும் இரட்டைக் காப்பியங் களிலும் பரத்தமையைக் கடிந்துரைக்கும் தன்மை காணப்படுகின்றது. திருக்குறள், நாலடியார் போன்ற அற நூல்கள் பரத்தமையைக் கண்டிப்பதோடு மட்டும் நின்று அதைக் களைவதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளன. திருக்குறள் சற்று மாறுபட்டு அமைகின்றது. சங்க காலத்தில் மருதநிலத்திணையின் ஊடலுக்குப் பரத்தையிற் பிரிவு காரணமாகச் சுட்டப்படுகின்றது. ஆனால் வள்ளுவரோ இத்திணை மரபில் புதியதொரு மாற்றத்தைக் காணும் முயற்சியாக இல்லறவாழ்வில் தலைவன் தலைவிக்கு இடையிலான ஊடலைப் பொய்க் கோபமாகக் காட்டியுள்ளார். வரைவின் மகளிரைக் காமத்துப் பாலில் கொண்டுவராமல் பொருட்பாலில் அடக்கிவிடுகின்றார். இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் பரத்தமையைக் கண்டிப்பதோடு அவ்வொழுக்கத்தால் ஏற்பட்ட சீர்குலைவுகளுக்கு ஊழ்வினைதான் காரணம் எனக்கூறி அமைதிகாண முற்படுகின்றது. ஆனால் சாத்தனாரோ சிலம்பில் இல்லாத அளவுக்குக் கணிகையர் பற்றிய தெளிவான விவரணங்களைத் தந்ததோடு மட்டுமல்லாமல் கணிகையர்குல மரபை இல்லாது ஒழிக்க துறவறத்தை நெறியாகக் காட்டியுள்ளார். மணிமேகலை என்னும் பாத்திரம், கணிகையர் குல மரபிலிருந்து விடுபட்டு அறிவு பூர்வமாகச் செயற்பட்டு துறவு நிலையடைந்ததை மணிமேகலை காப்பியம் சித்திரித்துள்ளது. இவ்வாறாக அற நெறிக் காலப் பண்பாட்டு அசைவியக்கத்தில் பொது மகளிரின் நிலையை அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களின் அடிப்படையில் வகைப்படுத்தி நோக்கமுடிகின்றது.

**பயன்படுத்திய நூல்கள்**

01. குறுந்தொகை, (2000), மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை
02. இரட்டைக் காப்பியங்கள், (1958), வ.சுப.மாணிக்கம் (பதி), செல்வி பதிப்பகம், காரைக்குடி
03. குமுதவள்ளி, இரா.,(2017), சங்ககாலச் சமூகமும் பரத்தமையும், காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்புமைய முனைவர் பட்ட ஆய்வேடு, புதுச்சேரி.
04. கைலாசபதி.க.,(1996), பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை
05. தொல்காப்பியம், (2008), இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
06. பதினெண் கீழ்க்கணக்கு, (2014), கோ.இளவழகன் / சதபூ.பத்மசீலன் (பதி.), தமிழ்மண் / சேமமடு பதிப்பகம், இலங்கை
07. மனோன்மணி, ச., (2006), காலத்தை வென்ற பெண்கள், அறிவுப் பதிப்பகம், சென்னை
08. மாணிக்கம், வ. சுப., (1962), கழகப்பதிப்பு, சென்னை.